**ஏப்ரல் – 03**

# TNPSC துளிகள்

- முதன்முறையாக, வங்காள விரிகுடாவில் நடைபெறும் "லா பெரௌஸ்" எனப்படும் பிரான்சு நாட்டின் ஒரு கடற்படைப் பயிற்சியில் இந்தியக் கடற்படையும் இணைய உள்ளது.
    - அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய QUAD என்ற அமைப்பைச் சேர்ந்த மற்ற மூன்று நாடுகள் இப்பயிற்சியில் பங்கேற்க உள்ளன.

# தேசியச் செய்திகள்

## ULPIN




- தனித்துவ நிலப்பரப்பு அடையாள எண் (Unique Land Parcel Identification Number – ULPIN) என்ற ஒரு திட்டமானது இந்த ஆண்டு 10 மாநிலங்களில் தொடங்கப் பட்டுள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்திற்குள் நாடு முழுவதும் தொடங்கப்படும்.
- 2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட டிஜிட்டல் ரீதியில் இந்திய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின் (DILRMP) ஓர் அங்கமாக மக்களவையில் பாராளுமன்ற நிலைக்குழு சமர்ப்பித்த ஒரு அறிக்கையில் இத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு 14 இலக்க அடையாள எண் வழங்கப்படும்.
- இது "நிலத்திற்கான ஆதார்" எனவும் கூறப்படுகிறது.
- இந்த எண் கணக்கெடுக்கப்பட்ட ஒவ்வொரு நிலத்தையும் அடையாளம் காணவும் இந்தியக் கிராமப்புறப் பகுதிகளில் பொதுவாக நிலவும் நில மோசடிகளைத்

தடுக்கவும் உதவும்.

- இந்திய கிராமப்புறப் பகுதிகளில் நில ஆவணங்கள் காலாவதியான மற்றும் சர்ச்சைக்குரியவையாக உள்ளது.
- இதில் அடையாளம் காணும் முறையானது நிலப்பரப்பின் அட்ச மற்றும் தீர்க்க ரேகையின் அடிப்படையிலானதாகும்.
- மேலும் இது விரிவானக் கணக்கெடுப்பு மற்றும் புவிசார் நில அளவைப் படத்தை பொருத்ததாகும்.

***பலன்கள்***

- இந்த மூல ஆவணம் நில உரிமையை அங்கீகரிக்க உதவும்.
- இது சந்தேகத்திற்குரிய நில உரிமை கோரிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.
- இது அரசு நிலங்களை எளிதில் அடையாளம் காண உதவும்.
- இது தகாத முறையிலான நிலப் பரிவர்த்தனைகளிலிருந்து நிலத்தைப் பாதுகாத்துக் கொள்ள உதவும்.

## இந்திய சுகாதார நலத்துறையில் முதலீட்டிற்கான வாய்ப்பு

- "இந்திய சுகாதார நலத்துறையில் முதலீட்டிற்கான வாய்ப்பு" என்ற அறிக்கை ஒன்றை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.
- மருத்துவமனைகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் உபகரணங்கள், மருத்துவக் காப்பீடு, தொலைதூர மருத்துவம், தனியார் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பயணங்கள் (Medical Value Travel) உள்ளிட்ட இந்திய சுகாதாரநலத் துறையின் பல்வேறு பிரிவுகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- 2016 ஆம் ஆண்டு முதல் சுமார் 22% என்ற ஒட்டு மொத்த வருடாந்திர வளர்ச்சி வீதத்தில் இந்தியாவின் சுகாதார நலத் தொழில்துறைகள் வளர்ந்து வருகின்றன.
- இந்த வீதத்தில், இந்த வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 372 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## முக்கிய நிதியியல் மாற்றங்கள்

- 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் 01 முதல் நடைமுறைக்கு வரும் முக்கிய நிதியியல் மாற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### *புதிய ஊதிய விதிகள்*

- புதிய இழப்பீட்டு விதிகளின் படி, மொத்த ஊதியம் (அ) இழப்பீட்டுத் தொகையில் படித் தொகையானது 50 சதவிகிதத்திற்கு மேல் மிஞ்சக் கூடாது.
- அதாவது அடிப்படை ஊதியமானது 50 சதவீதமாக இருக்க வேண்டும்.
- இந்த விதிக்கு இணங்க முதலாளிகள் சம்பளத்தின் அடிப்படை ஊதியக் கூறுகளை அதிகரிக்க வேண்டும்.
- இதனால் பணிக் கொடைத் தொகை மற்றும் தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் உயர்வு ஏற்படும்.

### *புதிய தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி வரி விதிகள்*

- 2021 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஏப்ரல் 01 முதல் ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்திற்கும் மேலான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கு அளிக்கப்படும் பங்களிப்பின் மீதான வட்டிக்கு வரி விதிக்கப்படும் என அறிவித்துள்ளார்.
- ரூ.2.5 லட்சம் வரையிலான வருங்கால வைப்பு நிதிக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியிலிருந்துப் பெறப்படும் வட்டிக்கு தற்போது உள்ள வரி விதிமுறைகளின் கீழ் விலக்கு அளிக்கப்படுகிறது.
- இருப்பினும் ஏப்ரல் 01 முதல் ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்திற்கும் மேலான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மீதான வட்டிக்கு (தொழிலாளரின் பங்களிப்பிற்கு மட்டும்) வரி விதிக்கப்படும்.

### *பொது துறை வங்கிகள் இணைப்பு*

- ஏழு பொதுத்துறை வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது கணக்குப் புத்தகம் (Pass book) மற்றும் காசோலைப் புத்தகம் (Cheque book) ஆகியவற்றைப் புதுப்பிக்க வேண்டும், ஏனெனில் 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் 01 முதல் அவை செயல்படாது.
- அந்த வங்கிகள் விஜயா வங்கி, தேனா வங்கி, கார்ப்பரேஷன் வங்கி, அலகாபாத் வங்கி, ஆந்திரா வங்கி, ஓரியண்டல் காமர்ஸ் வங்கி மற்றும் யுனிடெட் இந்திய வங்கி ஆகியவனவாகும்.
- ஏனெனில் இந்த ஏழு வங்கிகளும் ஏப்ரல் 01 முதல் மற்ற பிற வங்கிகளுடன் இணைக்கப் பட உள்ளது.
- இணைக்கப்பட உள்ள வங்கிகள்,
    - தேனா வங்கி மற்றும் விஜயா வங்கி ஆகியவை பரோடா வங்கியுடனும்,
    - ஓரியன்டல் காமர்ஸ் வங்கி மற்றும் யுனிடெட் இந்திய வங்கி ஆகியவை பஞ்சாப் தேசிய வங்கியுடனும்,
    - கார்ப்பரேஷன் வங்கி மற்றும் ஆந்திரா வங்கி ஆகியவை யூனியன் இந்திய வங்கியுடனும்
    - அலகாபாத் வங்கியானது இந்தியன் வங்கியுடனும் இணைக்கப்பட உள்ளன.

### *தானாக பணப்பிடித்தம் செய்வதை வங்கிகள் ரத்து செய்தல்*

- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) புதிய விதிமுறைகளின் காரணமாக ஏப்ரல் 01 முதல் டிடிஎச் (DTH), கைபேசி, அகலக் கற்றை, மின்சாரம், தண்ணீர் மற்றும் இதர வசதிகளுக்கான கட்டணங்களைத் தானாக பிடித்தம் செய்யும் முறையை வங்கிகள் ரத்து செய்ய உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## உத்கல் திவாஸ் – ஏப்ரல் 01

- உத்கல் திவாஸ் (அ) உத்கலா திபாசா ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 01 அன்று ஒடிசா மாநிலம் உருவாக்கப் பட்டதை நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.
- ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் ஒடிசாவானது தற்போதைய பீகார், மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆகியவற்றை உள்ளடக்கிய வங்காள மாகாணத்தின் ஓர் அங்கமாக இருந்தது.
- இந்த மாநிலம் ஆரம்பத்தில் ஒரிசா என்றழைக்கப்பட்டது.
- ஆனால் அதனை ஒடிசா என்று பெயர் மாற்றம் செய்ய 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரிசா மசோதா மற்றும் அரசியலமைப்பு (113வது திருத்தம்) என்ற மசோதாவினை மக்களவை நிறைவேற்றியது.

# முக்கிய தினங்கள்

## குரு தேக் பகதூரின் 400வது பிறந்தநாள்

- குரு தேக் பகதூரின் பிறந்தநாள் நிறைவு நாள் ஏப்ரல் 01 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- 17 ஆம் நூற்றாண்டில் சீக்கியர்களையும் இந்துக்களையும் இஸ்லாமியத்திற்கு மாறுமாறு கட்டாயப் படுத்திய ஒரு சட்டத்திலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கிய இவரது பணிக்காக இவர் வெகுவாக போற்றப் படுகிறார்.
- குரு நானக்கின் கொள்கைகளைப் பரப்புவதற்காக காஷ்மீர் மற்றும் அசாம் போன்ற நாட்டின் பல பகுதிகளுக்கு அவர் நீண்ட தூரப் பயணங்களை மேற்கொண்டார்.
- இவர் இஸ்லாமிய மதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்ததால் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் ஆணைப் படி டெல்லி நகரில் தூக்கிலிடப்பட்டார்.
- இவரது மகனான குரு கோபிந்த் சிங் சீக்கியர்களின் கடைசி குரு ஆவார்.

*குரு தேக் பகதூர்*

- குரு தேக் பகதூர் தியாக மால் என்பது இவரது இயற்பெயராகும்.
- குரு தேக் பகதூர் எனும் பெயர் ஹர்கோபிந்த் அவர்களால் வழங்கப்பட்டது.



# இதரச் செய்திகள்

## சிலிக்கா ஏரி

- ஒடிசாவிலுள்ள சிலிக்கா ஏரி ஒரு காலத்தில் வங்காள விரிகுடாவின் ஒரு அங்கமாக இருந்தது.
- இது கோவாவிலுள்ள தேசியக் கடலியல் நிறுவனத்தின் கடல்சார் தொல்லியல் துறை மேற்கொண்ட ஒரு ஆய்வின் படி கூறப்படுகிறது.

*குறிப்பு*

- சிலிக்கா ஏரி ஆசியாவின் மிகப்பெரிய ஒரு உவர்நீர் ஏரியாகும்.
- சிலிக்கா ஏரி ஒடிசாவின் பூரி, கர்தா மற்றும் கஞ்சம் ஆகிய மாவட்டங்களில் பரந்து விரிந்திருக்கும் ஓர் உவர்நீர் காயல் ஆகும்.
- இது வங்காள விரிகுடாவில் கலக்கும் தயா ஆற்றின் முகத்துவாரப் பகுதியில் அமைந்து உள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய காயல் இதுவாகும்.
- மேலும் நியூ கேலடோனியாவிலுள்ள புதிய கேலடோனியன் பவளப்பாறைத் திட்டுகளை அடுத்து உலகின் மிகப்பெரிய காயலும் இதுவேயாகும்.
- இது ராம்சார் தளங்களின் பட்டியலிலும் யுனெஸ்கோவின் தற்காலிக உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியலிலும் சேர்க்கப் பட்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★